சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.

அசல் வழக்கு எண். **272/2020**

வா.சா.**1-** தெய்வானை, நாள் **- 08.01.2024.**

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நான் தாக்கல் செய்துள்ள சத்தியப்பிரணமான வாக்குமூலம் தாக்கல் செய்யும்போது வழக்கறிஞர் கையெழுத்துச் செய்யச் சொன்னார். நான் கையெழுத்துச் செய்தேன். நான் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக தேனி மாவட்டத்தில்தான் குடியிருந்துவருகிறேன் என்றால் சரிதான். நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்குப் போட்டுள்ளேன் என்றால் எங்கள் குடும்ப சொத்தை எனக்குத் தெரியாமல் விற்றுவிட்டார்கள். அந்த சொத்தை நான் வாங்க ஆசைப்பட்டேன். அதனால் நான் வழக்குப் போட்டேன். மேற்படி வழக்குச் சொத்திற்கு என் பெயருக்கு பட்டா, சிட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் என் அப்பாவுடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். என் தாத்தா முனியாண்டிக்கு சொந்த பூர்வீக வீடு உள்ளதா என்றால் இல்லை. என் அப்பாவுக்கு நடந்த திருமணம் காதல் திருமணம் என்றால் இல்லை. என் அப்பா, என் தாத்தாவிற்கு விருப்பமில்லாமல் காதல் திருமணம் செய்துகொண்டு தேனியில் குடியிருந்தார் என்றால் சரியல்ல. எனது தாத்தா, என் அப்பாவுக்கு சொத்து பாகம் எதுவும் இல்லை என எழுதிவாங்கிக்கொண்டு வீட்டைவிட்டு அனுப்பிவிட்டார் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தின் சர்வே எண், பட்டா எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும். முதல் பாகச் சொத்து 362/87, 140 சென்ட். 2 வது பாகச் சொத்தின் சர்வே எண் ஞாபகமில்லை. 1997 இல் என் தாத்தா கிரையம் வாங்கிய விபரம் தெரியும். தாவா சொத்து

விபரம் எதுவும் தெரியாமல் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தாத்தாவிற்கு முன்பு தாவாச் சொத்தை யாருக்குப் பாத்தியப்பட்டது என்று எனக்குத் தெரியாது. என் பெற்றோர்கள் இல்லை. இறந்துவிட்டார்கள். தாவாச் சொத்தை வாங்கிய ராஜபாண்டி என்பவர் பிள்ளைமார் சமூகத்தைச் சார்ந்தவர் என்று தெரியுமா என்றால் தெரியாது. என் தாத்தா, மாணிக்கம் பிள்ளை என்பவரிடம்தான் கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது. 6ம் பிரதிவாதி, மாணிக்கம்பிள்ளைக்கு பேரன் முறை என்றால் தெரியாது. என் தாத்தா கிரையம் வாங்கியபோது மாணிக்கம்பிள்ளை வாய்க்கரால் என் தாத்தாவிடம் என் பிள்ளைகள் கிரையம் கேட்டால் கொடுக்கவேண்டும் என்று ஒப்பந்தம் போட்டுதான் கிரையம் கொடுத்தார் என்றால் தெரியாது. தாவாச் சொத்தின் மேற்குப் பக்கம் யார் என்றால் தெரியாது. 6ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய கிரையப் பத்திரத்தில் வாதியின் கிரையப் பங்கு 1/6 பாகம் தாங்களுடைய என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் பாகம் கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் அப்பா பிறந்த ஊர் உசிலம்பட்டி டவுன், கருக்கட்டான்பட்டி என்றால் சரிதான். அந்த ஊரில் போத்திராஜா மகன் துரைப்பாண்டியைத் தெரியுமா என்றால் தெரியாது. என் தாய் மாமா பெயர் சுரேஷ். துரைப்பாண்டியும், கருக்கட்டான்பட்டியைச் சேர்ந்த போத்திராஜா மகன் துரைப்பாண்டி, செல்லாண்டி மகன் மகாலிங்கம் இருவரும் வாதியின் தாய் மாமன் சுரேஷ் என்பவரிடம் அவர்கள் தங்கியிருக்கும் தேனிக்குச் சென்று அவரிடம் அந்தப் பாகத்தைக் வாதியின் பாட்டியிடம் கேட்டபோது மற்ற பிரதிவாதிகளுக்கும் எனக்கம் சம்பந்தமில்லை. அவரிடம் சென்று கிரையம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறி, என்னுடைய பாகத்தை தனியாக கிரையம் கொடுக்கலாம் என்ற

வாக்குறுதியைக் கொடுத்ததன் அடிப்படையில் 6ம் பிரதிவாதி கிரையம் பெற்றார் என்றால் அவ்வாறு வந்து கேட்கவில்லை. 6ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பு, என் பாட்டியிடம் அந்த சொத்தை கிரையம் வாங்குமாறு செல்லாண்டி மகன் துரைப்பாண்டியும், மகாலிங்கம் கேட்டதற்கு யாருக்கும் வேண்டாம் நீங்கள் விருப்பப்பட்ட நபருக்கு கிரையம் கொடுங்கள் என சொன்னதன் அடிப்படையில் கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. கிரையம் கொடுப்பதற்கு முன்பு தெரிவித்தபிறகுதான் கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் தாத்தாவும், என் பாட்டியும் வாழ்ந்த காலங்களில் ஏழ்மையாக வாழ்ந்தார்கள் என்றால் சரிதான். என் அப்பாவும் ஏழ்மையான வாழ்க்கைதான் வாழ்ந்தார் என்றால் சரிதான். அதனால் என் அப்பாவிடம் அந்தப் பாகத்தை வாங்க வசதியில்லை என்றால் சரியல்ல. அவர் இறந்துவிட்டார். என்னிடம் வசதி உள்ளது. கிரையம் கொடுத்த விபரம் எனக்கு 3 மாதங்கள் கழித்துத் தெரியவந்தது. கிரையம் வாங்குவதற்கு முன்பு என்னிடம் கேட்டார்கள் என்றாலும், நான் மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவாச் சொத்து வீடு இல்லை என்றால் சரிதான். தாவாச் சொத்து விவசாய நிலம். நான் கேட்கும் பரிகாரம் கூட்டு குடும்ப வீட்டிற்கு மட்டும் பொருந்தும் என்றாலும், விவசாய நிலத்தைப் பொறுத்து பொருந்தாது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 08.01.2024.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.